கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி:11.07.2024

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பட்டயப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை 2024–2025

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் போன்ற பட்டயப்படிப்புகளுக்கு 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கு மொத்தம் 2813 விண்ணப்பங்கள் பெறப் பெற்றன. வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் பட்டயப்படிப்புகளுக்கான இணையதள கலந்தாய்வு 12.07.2024, 13.07.2024 மற்றும் 14.07.2024 ஆகிய மூன்று நாட்கள் (மாலை 5.00 மணிவரை) நடைபெறுகிறது. இணையதள கலந்தாய்வு தொடர்பான விரிவான தகவல் தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலுக்கும் மற்றும் அலைபேசி எண்ணுக்கும் குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டுள்ளது.

இணையதள கலந்தாய்வின் போது விண்ணப்பதாரர்கள் எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. சான்றிதழ் சரிபார்ப்பின் போது விண்ணப்பதாரர்களிடமிருந்து கட்டணம் பெற்றுக்கொள்ளப்படும். அவ்வமயம், திரும்பப்பெறாத (Non-Refundable) கலந்தாய்வு கட்டணமாக ரூபாய்.200/- (பொதுபிரிவினர் (OC) / பிற்படுத்தப்பட்டோர் (BC) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) (BCM (DNC)) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) மற்றும் சீர்மரபினர்(DNC) அல்லது ரூபாய்.100/- (ஆதிதிராவிடர் (SC) /ஆதிதிராவிடர் – அருந்ததியர் (SCA) மற்றும் பழங்குடியினர் (ST) மாணவர்கள்) செலுத்த வேண்டும். சேர்க்கை பெற்ற மாணவர்கள் சேர்க்கையை உறுதி செய்யும் விதமாக இணையதளம் வாயிலாக ரூபாய்.5,000/- மட்டும் செலுத்த வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் http://tnagfi.ucanapply.com என்ற இணையதளத்தில் தங்களுடைய தரவுகளை வைத்து உள்நுழைந்து 12.07.2024 முதல் 13.07.2024 மாலை 5 மணி வரை தங்கள் கல்லூரி மற்றும் பாட விருப்பங்களை மாற்றிக்கொள்ளலாம். கடைசியாக உறுதி செய்யப்பட்ட விருப்பம், கல்லூரி மற்றும் பாடங்கள் இட ஒதுக்கீட்டிற்கு பரிசீலிக்கப்படும். இது குறித்த தெளிவான படிப்படியான செயல்முறை விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

கலந்தாய்விற்கான வழிமுறைகள் http://tnagfi.ucanapply.com என்ற இணையதள வாயிலாக தெரிந்துக் கொள்ளலாம். இதன் பொருட்டு ஏதேனும் விவரங்கள் தேவைப்பட்டால் 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் மற்றும் **ugadmissions@tnau.ac.in** என்ற மின்னஞ்சல் வழியாகவும் தொடர்பு கொண்டு தெளிவு பெறலாம்.

**பட்டயப்படிப்பிற்கான இணையதள கலந்தாய்வு நடைமுறைகள் 2024-2025**

**நாள் : 12.07.2024, 13.07.2024 மற்றும் 14.07.2024**

இணையதள கலந்தாய்வில் (வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் பட்டயப்படிப்புகளுக்கு) கலந்து கொள்ளும் விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்க்கு நேரடியாக வரத் தேவையில்லை. இணையத்தை பயன்படுத்தி விண்ணப்பதாரர்கள் இருக்குமிடத்திலிருந்து கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம்.

இணையவழி கலந்தாய்வின் போது விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்லூரி மற்றும் பாட விருப்பங்களை கீழே குறிப்பிட்டுள்ள நிலைகளை (Steps) பின்பற்றி மாற்றி அமைத்துக் கொள்ளலாம்.

இணையதள முகவரி : **http://tnagfi.ucanapply.com**

நிலை 1 : விண்ணப்பதாரர்கள் உள்நுழை (Login) என்ற பொத்தானை பயன்படுத்தி உள்நுழைய (Sign in) வேண்டும்.

நிலை 2 : விண்ணப்பதாரர்கள் பயனாளர் பெயர் (User name) மற்றும் கடவுச்சொல்லை (Password) பயன்படுத்தி உள்ளீடு செய்யவும்.

நிலை 3 : விண்ணப்பதாரர்கள் சமர்ப்பி (Submit button) என்ற பொத்தானை பயன்படுத்தவும்

நிலை 4 : விண்ணப்பதாரர்கள் தங்கள் விருப்பப்படி கல்லூரி (College Preference) மற்றும் பாட பிரிவினை (Course Preference) மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

நிலை 5 : விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்லூரி மற்றும் பாட பிரிவினை விவரங்களை மாற்றி அமைத்து இருந்தால் சேமிப்பு பொத்தானை(Save button) பயன்படுத்தி சேமித்துவிட்டு மற்றும் தொடர் பொத்தானை (Proceed button) பயன்படுத்தி தங்கள் கணக்கிலிருந்து (Log out) வெளியே வரவும்.

நிலை 6 : விண்ணப்பதாரர்கள் இறுதியாக தேர்ந்த எடுத்த கல்லூரி மற்றும் பாடப்பிரிவினையே அவர்களுக்குரிய இடஒதுக்கீட்டிற்கு எடுத்து கொள்ளப்படும்.

நிலை 7 : விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு குறிப்பிட்ட தேதியில் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்ள வேண்டும். சான்றிதழ் சரிபார்ப்பின் பொழுது அசல் சான்றிதழ்களை (பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு (10th &11th Original Marksheet) மற்றும் அசல் மாற்றுச் சான்றிதழ் (Original Transfer Certificate) சமர்ப்பிக்க வேண்டும்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***